07.11.2017

# விவசாயிகளுக்கு கைகொடுக்கும்‘காய்கறி கிராமங்கள்’ - தோட்டக் கலைத்துறையின் தொலைநோக்குப் பார்வை



புடலங்காய் சாகுபடி - The Hindu

எந்த இடத்தில் என்ன விளையும், இருக்கின்ற தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி எத்தகைய பயிர்களை பயிர்செய்து லாபம் ஈட்டலாம் என்பது போன்ற புரிதல் சரிவர இல்லாததால்தான் நமது விவசாயிகள் பெரும்பாலான நேரங்களில் அவதிப்படுகிறார்கள். இந்த அவதியைப் போக்கவும் மகசூலை இரட்டிப்பாக்கவும் ‘காய்கறி கிராமங்கள்’ என்ற யோசனையை கையிலெடுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது மதுரை மாவட்ட தோட்டக் கலைத்துறை!



**பூபதி**

**பின்தங்கிய மதுரை மாவட்டம்**

மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் விவசாயத்தில் மதுரை பின்தங்கிய மாவட்டமாகவே இருக்கிறது. இந்த பழைய வரலாற்றை மாற்றவே மதுரை மாவட்ட நிர்வாகமும் தோட்டக் கலைத் துறையும் இணைந்து, 'காய்கறி கிராமங்கள்' திட்டத்தை கையில் எடுத்திருக்கிறார்கள்.

மண் வளமும் நீர் வளமும் இருக்கும் கிராமங்களைத் தேர்வுசெய்து தத்தெடுத்து அங்குள்ள முன்னோடி விவசாயிகளை ஊக்குவித்து, அவர்களை ஆண்டு முழுவதும் காய்கறிகளை உற்பத்தி செய்யவைத்து மகசூலை இரட்டிப்பாக்குவது - இதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இதற்காக, மதுரை மாவட்டத்தில் முதல்கட்டமாக நைத்தான்பட்டி, பொதும்பு, தென்பழஞ்சி உள்ளிட்ட 13 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு அந்த கிராமங்களில் காய்கறி சாகுபடியை தொடங்கியுள்ளனர். தற்போது, இந்த திட்டத்தில் பயிரிடப்பட்ட வெண்டை, புடலை உள்ளிட்டவை அறுவடைக்கு தயாராகிவிட்டதில் விவசாயிகளுக்கும் தோட்டக்கலைத் துறையினருக்கும் எல்லையில்லா மகிழ்ச்சி.

**காய்கறி கிராமங்கள்**

அந்த கிராமங்களுக்கு நம்மையும் அழைத்துச் சென்று மகிழ்ச்சியை நம்மிடமும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த யோசனை எப்படி வந்தது என மதுரை மாவட்ட தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் பூபதியிடம் கேட்டோம். “இதுக்கு தூண்டுகோலாக இருந்தவர் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ்தான்” என்ற முன்னுரையுடன் நம்மிடம் பேச ஆரம்பித்தார்.



வெண்டைக்காய் வயலில் அதிகாரிகள்..

‘‘மாதா மாதம் நடக்கும், விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை உன்னிப்பாக கவனித்து வந்த ஆட்சியர், ஒரு நாள் எங்களை அழைத்து சொன்ன விஷயம் தான் இந்த ‘காய்கறி கிராமங்கள்’ ஐடியா. நாட்டின் மொத்த சாகுபடி பரப்பில் 20 சதவீதம்தான் தோட்டக் கலைப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆனால், 80 சதவீதத்தில் உற்பத்தியாகும் வேளாண் பயிர்களுக்கு இணையான வருவாயை தோட்டக்கலைப் பயிர்களிலிருந்து எடுக்கலாம்.

**சந்தைப்படுத்தவும் ஆலோசனை**

தமிழகத்தைப் பொறுத்தவரை, உள்ளூர் காய்கறி தேவைகளுக்கு பெரும்பாலும் வெளிமாநிலங்களைச் சார்ந்தே இருக்கிறோம். தேவை அதிகமாக இருப்பதால் தட்டுப்பாடு அதிகமாகி சில நேரங்களில் விலை உச்சத்தைத் தொடுகிறது. சில நேரங்களில் சில காய்கறிகள் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகி சாலையில் கொட்டப்படுகின்றன. ஆனால், 'காய்கறி கிராமங்கள்' திட்டத்தில் இந்தச் சங்கடங்களுக்கு வாய்ப்பில்லை. பயிர் செய்வதற்கான யோசனையையும், மானியமும் கொடுத்துவிடுவதோடு நின்றுவிடாமல், காய்கறிகளைச் சந்தைப்படுத்துவதிலும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகிறோம்" என்று சொன்னார் பூபதி.



புடலை, பீர்க்கங்காய் சாகுபடி - The Hindu

ஒரே வகை காய்கறிகளை பயிரிடுவதால்தான் பல நேரங்களில் விளைபொருட்களுக்கான கட்டுபடி விலை கிடைப்பதில்லைஆனால் ., காய்கறி கிராமங்கள் திட்டத்தில் வெவ்வேறு வகையான காய்கறிகளை அனைத்து பருவ காலங்களிலும் சாகுபடி செய்யவைக்க இருக்கிறார்கள் மதுரை மாவட்டத்தில் .

மொத்தம்20 ஆயிரம் ஹேக்டேரில் தோட்டக் கலைப்பயிர்கள் பயிரிடப்படுகின்றன .

இதில், 2 ஆயிரம் ஹேக்டேரில் மட்டுமே தற்போது காய்கறி விளைவிக்கப்படுகிறது . இதில், வெண்டை, புடலை, கத்திரி, தக்காளி, வெங்காயம் மட்டுமே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன மற்ற காய்கறிகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புகள் . இருந்தும் அவற்றைப் பயிரிட யாரும் ஆர்வம் காட்டுவதில்லை.

**தனியான திட்டம் ஏதுவுமில்லை**

இதை விவசாயிகளுக்குப் புரியவைத்து, மற்ற காய்கறிகளையும் பயிரிடவைப்பதும் இந்தத் திட்டத்தின் அடுத்த இலக்காம். இதன் மூலம், தற்போது 2 ஆயிரம் ஹெக்டேராக இருக்கும் காய்கறி சாகுபடி பரப்பை 4 ஆயிரம் ஹெக்டேராக உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக வட்டாரம் வாரியாக சென்று கிராமங்களைத் தேர்வு செய்து, அவற்றை 100 சதவீதம் காய்கறிகளை விளைவிக்கும் பகுதியாக மாற்றவிருப்பதாகச் சொல்கிறார்கள் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள்.

“இந்த ‘காய்கறி கிராமங்கள்’ திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், இடுபொருட்கள் வழங்குகிறோம். இதற்காக தனி திட்டமெல்லாம் ஏதுமில்லை. ஏற்கனவே இருக்கும் தேசிய தோட்டக்கலை இயக்கம், பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம், பிரதம மந்திரி வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பரப்பு விரிவாக்கத் திட்டம் உள்ளிட்டவை மூலமாகவே இந்த சலுகைகளை வழங்குகிறோம்.



புடலங்காய் தோட்டத்தில்..   -  The Hindu

**இரட்டிப்பாக்குவதே..**

மதுரை மாவட்டத்தில் காய்கறி சாகுபடிக்கேற்ற செம்மண் பூமி அதிகமாக இல்லை. கரிசல் மண் பூமி அதிகமாக இருப்பதால் அங்கே தொழு உரம் சேர்த்து காய்கறிகளைப் பயிரிடலாம். ஒவ்வொரு பகுதியிலும் அந்தப் பகுதியில் விளையக்கூடிய காய்கறிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிரிட வைத்து, விவசாயிகளுக்கு நல்ல வருவாயை ஏற்படுத்தித் தருவதுடன் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதும் காய்கறி கிராமங்கள் திட்டத்தின் முக்கிய இலக்கு'' என்கிறார் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பூபதி.

படங்கள்: ஜி.மூர்த்தி

## வட தமிழகத்தில் மிதமான மழை தென் தமிழகத்தில் கனமழை: வானிலை ஆய்வு மையம் தகவல்



கோப்புப் படம்

வட தமிழகத்தில் மிதமான மழையும், தென் தமிழகத்தில் கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் விட்டு விட்டு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:

''தென் மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்து கேரளாவின் தெற்கு பகுதியையொட்டிய தென் கிழக்கு அரபிக்கடலில் மேலடுக்கு சுழற்சியாக மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பரலவமாக மழை பெய்துள்ளது.

இதனிடையே அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. அது மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த 24 மணிநேரத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக நாகை மாவட்டம் தலைஞாயிறு பகுதியில் 8 செ.மீ மழை பதிவாகியுள்ளது. திருத்துறைபூண்டியில் 7 செ.மீ, நாகை மற்றும் குன்னூரில் 4 செ.மீ மழை பெய்துள்ளது.

சென்னை தாம்பரத்தில் 2 செ.மீ, நுங்கம்பாக்கம் மற்றும் மீனம்பாக்கத்தில் தலா ஒரு செ.மீ மழை பதிவாகியுள்ளது.

அடுத்த 24 மணிநேரத்தை பொறுத்தவரை தென் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், வட தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென் தமிழகத்தின் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்யும். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை பொறுத்தவரையில் விட்டு விட்டு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது'' எனக் கூறினார்.

## புரட்டிப் போட்டது வடகிழக்கு பருவமழை: வெள்ளக்காடானது டெல்டா மாவட்ட வயல்வெளிகள்



வயல்களை சூழ்ந்துள்ள மழைநீர்.

**2.20 லட்சம் ஏக்கர் பாதிப்பு; வடிகால்வாய்கள் தூர்வாரப்படாததால் மழைநீர் வடிவதில் சிக்கல்; பெரும் சோகத்தில் விவசாயிகள்**

பாபநாசம் பகுதியில் மட்டும் ஏறத்தாழ 15-க்கும் மேற்பட்ட வீடுகளின் சுவர் இடிந்துள்ளன. திருப்பனந்தாள் அருகே கட்டாநகரம் என்ற கிராமத்தில் ஜெகதாம்பாள் என்பவர் தொகுப்பு வீடு இடிந்தும், பாபநாசத்தில் மின்னல் தாக்கி முருகேசன் என்பவரும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 10 தினங்களாக விடாது பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் காவிரி டெல்டா மாவட்டங்களான நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் விளைநிலங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. இதனால், விவசாயிகள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

வழக்கமாக தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை அக்டோபர் மாத இறுதியில் தொடங்கும். கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்த நிலையில், இந்த ஆண்டு சரியான நேரத்தில் தொடங்கிய பருவமழை, தொடர்ந்து கடந்த 10 தினங்களாக வங்கக் கடலை ஒட்டியுள்ள மாவட்டங்களில் பெய்து வருகிறது.

**நாகை மாவட்டம்**

நாகை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் அக்.26-ம் தேதி தொடங்கிய மழை தொடர்ந்து ஆரவாரமில்லாமல் அடர்த்தியாக பெய்து வருகிறது. இதன் காரணமாக நாகை மாவட்டம் முழுவதுமே வெள்ளக்காடாகவே காட்சியளிக்கிறது.

நெல் வயல்கள் முழுவதும் தண்ணீர் நிரம்பி ஏரி, குளம் போன்று காட்சியளிக்கின்றன. 5-ம் தேதி காலை வரையில் நாகை மாவட்டத்தில் சராசரியாக 50.9 செ.மீ. மழை பெய்தது. இந்தக் காலத்தில் இந்த மாவட்டத்தின் சராசரி மழை அளவு 20.9 செ.மீட்டர்தான் என்ற நிலையில் இருமடங்காக மழை பெய்துள்ளது.

நாகை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள 3.40 லட்சம் ஏக்கர் நெற்பயிர்களில் தற்போது வரையில் 1.50 லட்சம் ஏக்கர் நீரால் சூழப்பட்டு, பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. இதில் குறிப்பாக தலைஞாயிறு, சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை, செம்பனார்கோயில் ஒன்றியங்களில் மட்டும் ஏறத்தாழ 80 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வேதாரண்யம் பகுதியில் 3,500 ஏக்கரில் உள்ள உப்பளங்களில் முழுவதுமாக மழைநீர் நிரம்பியுள்ளன.

நாகை மாவட்டத்தில் மட்டும் கடந்த 10 நாட்களில் ஒரு சிறுவன் உள்ளிட்ட 3 பேர் மழைக்கு பலியாகியுள்ளனர். மேலும், 44 மாடுகள், 23 கன்றுகள், 79 ஆடுகள் இறந்துள்ளன. 32 வீடுகள் முழுவதுமாகவும், 200-க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவும் இடிந்துள்ளன. 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மழைநீரால் சூழப்பட்டுள்ளன.

கனமழை மற்றும் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடந்த ஒருவாரமாக மீன்பிடித் தொழில் முடங்கியுள்ளது.

**திருவாரூர் மாவட்டம்**

திருவாரூர் மாவட்டத்தில் நவ. 30-ம் தேதி முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் சம்பா பருவத்தில் நேரடி தெளிப்பு மூலம் திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை, நன்னிலம், குடவாசல் ஒன்றியங்களில் சாகுபடி செய்திருந்த நெற்பயிர்கள் ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் வரையில் மழைநீரில் மூழ்கியுள்ளன. மேலும், மாவட்டத்தின் பிற பகுதிகளில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நடவு செய்யப்பட்டிருந்த சம்பா பயிர்களும் மழைநீரில் மூழ்கியுள்ளன.

**தஞ்சாவூர் மாவட்டம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் வட்டங்கள் மழையால் பெரும் இன்னலுக்குள்ளாகியுள்ளன. மாவட்டத்தில் இந்த ஒன்றியங்களில்தான் அதிக மழை பெய்துள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே சுந்தரபெருமாள்கோவிலில் நீரில் மூழ்கிய குறுவை நெற் பயிர்களை காட்டும் விவசாயி.



தொகுப்பு வீடு இடிந்து விழுந்ததில்

பாபநாசம் பகுதியில் மட்டும் ஏறத்தாழ 15-க்கும் மேற்பட்ட வீடுகளின் சுவர் இடிந்துள்ளன. திருப்பனந்தாள் அருகே கட்டாநகரம் என்ற கிராமத்தில் ஜெகதாம்பாள் என்பவர் தொகுப்பு வீடு இடிந்தும், பாபநாசத்தில் மின்னல் தாக்கி முருகேசன் என்பவரும் உயிரிழந்துள்ளனர்.

கும்பகோணம் ஒன்றியத்தில் தாமதமாக சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெற்பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தன. இதில், ஏறத்தாழ 150 ஏக்கர் பரப்பிலான நெற்பயிர்கள் இந்த தொடர்மழையால் நீரால் சூழப்பட்டு வயல்களிலேயே சாய்ந்து கிடக்கின்றன.

பாபநாசம் வட்டம் கபிஸ்தலம் பகுதியில் மழைநீர், வாய்க்கால் வழியாக வடியாததால், 100 ஏக்கருக்கும் மேல் பயிரிடப்பட்ட சம்பா நெற்பயிர் வயல்களில் மழைநீர் தேங்கியுள்ளது. அதேபோல திருப்பனந்தாள் பகுதியில் செம்மங்குடி, கீரனூர், வேலங்குடி பகுதிகளில் சுமார் 300 ஏக்கரில் சம்பா நெற்பயிர் மழைநீரில் மூழ்கியுள்ளது.

**காரைக்கால் மாவட்டம்**

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த அக்.29- ம் தேதி முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் 11 மீனவ கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் உள்ளனர். சுமார் 300 விசைப்படகுகளும், 500 பைபர் படகுகளும் மீன்பிடி தொழிலுக்கு செல்கின்றன.



திருப்பனந்தாள் அருகே மழையால் இடிந்த தொகுப்பு வீடு. (உள்படம்) விபத்தில் இறந்த ஜெகதாம்பாள்.

பலத்த காற்று இல்லாத காரணத்தால் மீனவர்கள் பலர் தொழிலுக்கு சென்றாலும் கூட கனமழையின் காரணமாக பெரும்பாலான மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை. கடந்த 3- ம் தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்ற காளிக்குப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவர் மாசிலாமணி(36) என்பவர் படகு பழுதான நிலையில் அலையின் சீற்றத்தால் படகு கவிழ்ந்ததில் கடலில் விழுந்து உயிரிழந்தார்.

மாவட்டத்தில் திருநள்ளாறு, அம்பகரத்தூர், திருமலைராயன்பட்டினம், கோட்டுச்சேரி, நெடுங்காடு சுற்று வட்டாரப் பகுதிகளில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விடப்பட்டிருந்த நாற்றுகள் சேதமடைந்துள்ளன.

**சீரமைக்கப்படாத வடிகால்கள்**

பாசன வாய்க்கால்கள் மட்டுமன்றி வடிகால்களும் உரிய முறையில் தூர்வாரப்படாததாலும், ஆறுகள், வாய்க்கால்கள் கடலில் கலக்கும் கழிமுகத்துவாரங்களில் சேர்ந்துள்ள மண் அகற்றப்படாததாலும் மழை நீர் வடிவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், மழை நீர் வடிவதில் தொடர்ந்து தாமதம் நீடித்து வருவதாலும் பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்படும் என்பதால் டெல்டா மாவட்ட விவசாயிகள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

வயல்களை சூழ்ந்துள்ள தண்ணீர் முழுவதுமாக வடிந்தால்தான் பயிர்களின் நிலை தெரியவரும். அதன் பிறகுதான் சேத மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் என்கின்றனர் வேளாண்துறையினர். மழை, வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கு பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை மற்றும் அரசின் நிவாரணம் ஆகியவை வழங்க வேண்டும் என்பதுதான் விவசாயிகளின் பிரதான கோரிக்கையாக உள்ளது.